ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විසේෂමානது

අංක 2300/12 - 2022 ඔක්තෝබර් මස 05 වැනි බදාදා - 2022.10.05

*2300/12 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ச் சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கம் மற்றும் 1987ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்ஹ ஆகிய என்னால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்ஹ,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு
மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, ஒற்றோபர் 05.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் "**2022 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்**" என அழைக்கப்படும்.



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. திருத்தம் செய்யப்பட்ட, 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி கொண்ட 1739/3 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்கம் கொண்ட விஷேட இறக்குமதி அனுமதிப் பத்திர மற்றும் கொடுப்பனவு ஒழுங்கு விதிகள், இதன் மூலம் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

3. மேலே குறிப்பிடப்பட்ட 2011 ஆம் ஆண்டு 1ஆம் இலக்கம் கொண்ட விஷேட இறக்குமதி அனுமதிப் பத்திர மற்றும் கொடுப்பனவு ஒழுங்கு விதிகளில் இலக்கம் 6(1) ஆவது ஒழுங்கு விதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டதோ, இவ் ஒழுங்கு விதிகளில் IV ஆவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவசாய விதைகள், விவசாய இரசாயண மற்றும் இரசாயணப் பசளைகளை இறக்குமதி செய்வதற்காக இலங்கை ரூபாவின் கணக்கின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முற்பணக் கொடுப்பனவு (முற்பணம்) இற்காக ஐக்கிய ஒன்றிய டொலர் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் வரை (அ.டொ.250,000) அல்லது அதற்குச் சமனான வேறு ஏதேனும் மாற்று வெளிநாட்டு பணத்தொகை வரை அனுமதி வழங்கப்படும்.

4. மேலே ஒழுங்கு விதிகளில் இலக்கம் 3 இன் நோக்கினை முன்னிட்டு, கீழே IV ஆவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவசாய விதைகள், விவசாய இரசாயண மற்றும் இரசாயணப் பசளைகள் இதன் மூலம் உள்ளடக்கப்படுவதோடு, மேலே குறிப்பிடப்பட்ட 2011 ஆம் ஆண்டு 1ஆம் இலக்கம் கொண்ட விஷேட இறக்குமதி அனுமதிப் பத்திர மற்றும் கொடுப்பனவு ஒழுங்கு விதிகளில் இலக்கம் 8 கொண்ட ஒழுங்கு விதியில் கட்டாயமான ஒரு பகுதியாக வாசிக்கப்பட வேண்டும்.

**IV உப அட்டவணை**

| *இலக்கம்* | *தொகுதி* | *HS குறியீடு* |
|---|---|---|
| 1 | போஞ்சி விதைகள் | 0713.33.10 |
| 2 | சோள விதைகள் (Corn seeds) | 1005.10.00 |
| 3 | சோள விதைகள் (Maize seeds) | 1005.10.00 |
| 4 | மரக்கறி விதைகள் | 1209.91.00 |
| 5 | பழ விதைகள் | 1209.99.10 |
| 6 | மெக்னீசியம் ஸல்பேட் | 2833.21.00 |
| 7 | நாக ஸல்பேட் | 2833.26.10 |
| 8 | மண் கண்டிசனர் | 2836.50.00 |
| 9 | யூரியா | 3102.10.00 |
| 10 | எஸ்.ஓ.ஏ | 3102.21.00 |
| 11 | கல்சியம் நைதரேட்டு | 3102.60.00 |
| 12 | ரீ.எஸ்.பீ. | 3103.11.00 |
| 13 | எம்.ஓ.பீ | 3104.90.00 |
| 14 | என்.பீ.கே பொருட் கலவை | 3105.20.00 |
| 15 | எல்பர்ட் திரவம் | 3105.20.10 |
| 16 | டீ.ஏ.பீ | 3105.30.00 |
| 17 | கீஸரைட் | 3105.30.00 |
| 18 | என்.பீ.கே பொருட் கலவை அல்லாத-கூ பாதியாக அளவிலான திரவக் கலவை | 3105.90.00 |
| 19 | கிருமி நாசினிகள் | 3808.91.90 |
| 20 | திரவ கிருமி நாசினிகள் | 3808.92.90 |
| 21 | களை நாசினிகள் | 3808.93.90 |
| 22 | உயிர்த் தூண்டிகள் | 3824.99.90 |

EOG 10 - 0103

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.